பக்கங்கள் - 10

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 06 ஞாயிற்றுக்கிழமை (19.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

சுன்னாகத்தைச் சேர்ந்தவர்

## கொரோனாவால் பிரான்ஸில் மரணம்



(பாரிஸ்)
கொரோனா வைரஸால் மேலுமொரு புலம்பெயர்

02

தேர்தல் நடத்தும் திகதி இன்னும் தீர்மானிக்கவில்லை

## நாடு வழமை நிலைமைக்கு திரும்பிய ஐந்து வாரங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும்



தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)
நாடு வழமை நிலைமைக்கு திரும்பிய ஐந்து வாரங்களின் பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுத் தேர்தலுக்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தேர்தல் நடத்தப்படும்

02

# யாழ் உள்ளிட்ட 18 மாவட்டங்களில் நாளை முதல் ஊரடங்கு தளர்வு

## காலை 5 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்கு அன்று இரவு 8 மணிக்கு மீண்டும் அமுலாகும்

(கொழும்பு)

***யாழ்ப்பாணம் உள்ளிட்ட 18 மாவட்டங்களில் நாளை 20ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஊரடங்கு தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.***

***ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்கு இரவு 8 மணிக்கு அமுலாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.***

மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் நோக்குடன் ஊரடங்குச் சட்டத்தை இலகுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏப்ரல் 20ஆம் திகதி முதல் மாவட்ட ரீதியிலும் பொலிஸ் பிரிவுகளின் அடிப்படையிலும் ஊரடங்குச் சட்டம் இலகுபடுத்தப்படும் விதம் தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அதற்கமைய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி, கேகாலை, அம்பாறை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 20ஆம் திகதி காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் ஊரடங்குச் சட்டம் அன்றைய தினமே மீண்டும் இரவு 8 மணிக்கு மீள பிறப்பிக்கப்படவுள்ளது.

இந்த மாவட்டங்களில் மறு அறிவித்தல் வரை தினமும் இரவு 8 மணி முதல்

02

## யாழைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர்

கொரோனாவால் லண்டனில் பலி



(லண்டன்)
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபர் ஒருவர் கொரோனா வைரஸால் லண்டனில் உயிரிழந்துள்ளார்.

02

## வெளியில் நடமாடுவதை தவிர்த்து கொள்ளுங்கள்

ஜனாதிபதி கோட்டாபய வேண்டுகோள்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்காக அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை படிப்படியாக தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இருந்தும் இக் காலப்

02

கொரோனா அச்சம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை

## தனியார் கல்வி நிலையங்கள், தியேட்டர்கள் திறக்க அனுமதியில்லை

- விழாக்கள், சுற்றுலாப் பயணத்துக்கு தடை
- தனியார் நிறுவனங்கள் காலை 10 மணிக்கே திறக்கப்பட வேண்டும்

(கொழும்பு)
கொரோனா தொற்று அபாயம் இன்னும் முழுமையாக நீங்கி விடவில்லை.

எனவே வைரஸ் பரவுவதற்கு மீண்டும் இடமளிக்காத வகையில் அனைத்து சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி பொறுப்புடனும் பொறுமையாகவும் செயற்படுமாறு அரசு பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் தொழிலுக்காக சென்று வருவதை தவிர வேறு சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், மேலதிக வகுப்புகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் மற்றும் திரையரங்குகள் மீண்டும் அறிவிக்கும் வரை மூடப்பட்டிருக்க வேண்டும்.

அனைத்து வகையான விழாக்கள், சுற்றுப் பயணங்கள், யாத்திரைகள், களியாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றன

02

திகதியொன்றை நிர்ணயிக்காமல்

## பொதுத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)
பாராளுமன்ற தேர்தலுக்கான புதிய திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு

02

254 பேருக்கு

## கொரோனா

(கொழும்பு)
கொரோனா வைரஸ் (Covid-19) தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் பத்துப் பேர் நேற்று சனிக்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று

02

## கொரோனாவால் பாதிக்கப்பட்ட யாழைச் சேர்ந்த இருவர்

குணமடைந்து இன்று வீடு திரும்புகின்றனர்

(கொழும்பு)
பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கண்காணிப்பிலிருந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி வெலிகந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ்ப்பாணத்தைச்

02

கொரோனா தொற்று அபாயம்

## இலங்கையில் நீங்கவில்லை

சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்று அபாயம் இலங்கையில் முழுமையாக நீங்கவில்லை என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அபாயம்

02

## நாடு வழமை...

தினம் தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்தும் தினம் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை தீர்மானிக்கவில்லை.

தேர்தல் நடத்தப்படும் தினம் எனக் கூறி பல்வேறு வதந்திகள் பரவி வருவதுடன் சமூக வலைத்தளங்களிலும் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காணப்படும் அனைத்து நிலைமைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாட தேர்தல் ஆணைக்குழு நாளை கூடவுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## யாழைச் சேர்ந்த...

முல்லைத்தீவு தண்ணீரூற்றை பிறப்பிடமாகவும் யாழ் சுண்டுக்குளியை வாழ் விடமாகவும் பிரித்தானியாவில் வசித்து வந்த வருமான முன்னைநாள் அதிபர் பொன். தியாகராஜா லண்டன் வைத்திய சாலையில் கொரோனா சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். (ம-3)

## பொதுத் தேர்தலை...

அறிவிக்க வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்காமல் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அவர்களுக்கு எந்த அதிகாரம் இல்லை என்றும் 1981 ஆம் ஆண்டின் இலக்கம் 1 பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் பிரிவு 24 (3) ஐ மேற்கோள் காட்டி பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று மற்றும் ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றத் தேர்தல் குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் எதிர்காலத்தில் என்ன நிகழலாம் அல்லது நிகழாது என்ற ஊகத்தின் அடிப்படையில் இத்தகைய சட்டங்களை புறக்கணிக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதன் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழு முதலில் பிரிவு 24 (3) இன் கீழ் தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அதன்பின்னர் நிலுவையில் உள்ள ஏதேனும் சிக்கல்கள் தொடர்பில் விவாதிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-3)

## கொரோனாவால்...

ஈழத் தமிழர் உயிரிழந்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்த யாழ்ப்பாணம் சுன்னாகம் அந்தோனியார் கோவிலடி பகுதியைச் சேர்ந்த ஜோர்ச் (வயது-56) என்பவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொரோனா தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார். (ம-3)

## தனியார் கல்வி...

மீண்டும் அறிவிக்கும் வரை தடைசெய்யப்பட்டுள்ளன.

மக்கள் ஒன்றுகூடுவது வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு தடை என்பதால் சமய விழாக்களையும் இடைநிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் வழமையான ஒழுங்கில் செயற்படும்.

கொழும்பு மாவட்டத்தின் உள்ளே அரச நிறுவனங்களில் ஊழியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும். ஏனைய மாவட்டங்களில் உள்ள அரச நிறுவனங்களில் 50 வீதமான ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்க வேண்டும். அனைத்து அரச நிறுவனங்களிலும் பணிக்கு சமுகமளிக்காத ஊழியர்கள் வீட்டிலிருந்து தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனத்திலும் கடமைக்கு சமுகமளிக்க வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் யார் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க முடியும்.

ஒரு நாளில் பணிக்கு சமுகமளிக்கும் முன்றில் ஒரு பகுதியினர் மற்றும் 50 வீதமானவர்களுக்கு பதிலாக அடுத்த நாளில் வேறு பிரிவினரை நிறுவனத் தலைவர்கள் தெரிவு செய்யலாம்.

அலுவலகங்களை திறந்து நடத்திச் செல்லுகின்றபோது கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ள நடைமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தேவையான வசதிகளை வழங்குவது நிறுவன தலைவர்களின் பொறுப்பாகும்.

தனியார் துறை நிறுவனங்களை காலை 10.00 மணிக்கு திறக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களில் கடமைக்கு சமுகமளிக்க வேண்டிய எண்ணிக்கை மற்றும் யார் சமுகமளிக் வேண்டும் என்பதை நிறுவனத் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டும். இந்நிறுவனங்களும் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை முழுமையாக பின்பற்ற வேண்டும்.

மீண்டும் திறக்கப்படும் அலுவலகங்களில் ஊழியர்களின் போக்குவரத்து வசதிகளை வழங்க போக்குவரத்துச் சபை மற்றும் புகையிரத சேவை ஏற்பாடுகளை செய்ய வேண்டும். அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களில் கடமைக்கு சமுகமளிக்கும் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பினும் அரச போக்குவரத்து சேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் அனைத்து ஊழியர்களும் கடமைக்கு சமுகமளிப்பது கட்டாயமானதாகும்.

பேருந்துகள், வான் அல்லது தொடருந்துகளில் பயணம்செய்யும் பயணிகளின் எண்ணிக்கையில் அரைவாசி அளவு மட்டுமே பயணம் செய்ய வேண்டும். அனைத்து வாகனங்களும் கிருமி தொற்றுநீக்கத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இந்த நிபந்தனைகளின் கீழ் தமது பணிகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு அரசு தனியார் துறை போக்குவரத்து நிறுவனங்களிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவுவதற்கு மத்தியில் ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப் படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மக்களின் இந்த பயங்கரமான நோய்த்தொற்றிலிருந்து விடுவிக்கும் நோக்குடனேயே செயற்படுத்தப் படுகின்றது. பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக கிடைத்த முன்னேற்ற நிலைமைகள் ஊரடங்கு சட்டத்தை தளர்த்துவதற்கு உதவியது.

பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் இடர் நிலைக்குள்ளான மக்கள் பிரிவினரின் வாழ்க்கையை பாதுகாப்பது மற்றுமொரு நோக்கமாகும்.

எனினும் கொரோனா தொற்று அபாயம் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை. எனவே வைரஸ் பரவுவதற்கு மீண்டும் இடமளிக்காத வகையில் அனைத்து சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி பொறுப்புடனும் பொறுமையாகவும் செயற்படுமாறு அரசு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் தொழிலுக்காக சென்றுவருவதை தவிர வேறு சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தியவுடன் தேவையற்ற பதற்றத்துடன் பெருமளவில் ஒன்றுகூடும் வகையில் வர்த்தக நிலையங்களில் ஒன்றுகூட வேண்டாம் என்றும் மக்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா பிரச்சினையை முழுமையாக ஒழித்துவிட்டதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிடும் வரை தம்முடையதும் பிள்ளைகளுடையதும், தேசத்தினதும் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்காக அனைத்து சிரமங்களையும் பொறுப்புடன் சகித்துக் கொள்ளுமாறு அரசு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (ம-3)

## யாழ் உள்ளிட்ட...

மறுநாள் அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கண்டி, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அலவத்துகொடை, அக்குரணை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. (ம-3)

## வெளியில் நடமாடு...

பகுதியில் நமது சேவை நிலையங்களிற்கு சமுகமளித்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது பேஸ்புக் வலைத்தளத்திலேயே மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

நாம் பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக கிடைத்த முன்னேற்ற நிலைமைகளின் மூலமே இந்த முடிவை எடுத்ததோடு பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்ட வறிய மற்றும் இடர் நிலைக்குள்ளான மக்கள் பிரிவினரின் வாழ்க்கையை பாதுகாப்பது மற்றுமொரு நோக்கமாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வது ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைய செயற்படுவதன் மூலமே இந்த சவாலுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க முடியும் என்பதை நான் உங்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என பதிவிட்டுள்ளார். (ம-3)

## கொரோனாவால் பாதி...

சேர்ந்த இருவர், முழுமையாகக் குணமடைந்து இன்று வீடு திரும்பவுள்ளனர்.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர்கள் வீடுகளுக்கு திரும்பினாலும் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு அமைய வீட்டிலேயே இருப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## கொரோனா...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அவர்களில் மூவர் ஒலுவில் தனிமைப் படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டோரின் எண்ணிக்கை 254ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

86 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 161 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## இலங்கையில்...

முழுமையான அளவில் நீங்கவில்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க நேற்றைய தினம் அறிவித்துள்ளார்.

சில ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டது போன்று கொரோனா வைரஸ் தொற்று முழு அளவில் நீங்கவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சமூகத்திற்கு இடையில் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதனை வரையறுத்துள்ளதாகவும், அடையாளம் காணப்பட்டவர்கள் சமூகத்துடன் தொடர்பு கொள்வது தடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் தொற்று பரவுவதனை தடுப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

மக்களின் இயல்பு வாழ்க்கை முன்னெடுக்கப்பட்டாலும் வைரஸ் தொற்று பரவுவதனை தடுப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகலிங்கம்

**(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி)**

**தோற்றம்: 07.04.1918 மறைவு: 17.04.2020**

*சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரத சாரதி) நேற்று முன்தினம் தனது 102ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் திருமதி சற்குண சறோஜினி (ஓய்வு பெற்ற ஆயுள்வேத வைத்தியர் - வலி வடக்கு பிரதேச சபை), காலஞ்சென்ற ரவி (சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருமைநாயகத்தின் (ஆயுள்வேத வைத்தியர்) பாசமிகு மாமனாரும் Dr.அ.ஜெயகுமரன் (சுகாதார வைத்திய அதிகாரி - நல்லூர்), திருமதி நித்யா (தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் சரண்யனின் (மாணவன் - யாழ்.இந்துக் கல்லூரி) அன்புப் பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 17.04.2020 வெள்ளிக்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

தொ.பே:
**0773715955, 0212240088**

(C-9516)

தகவல்:
**Dr.அ.ஜெயகுமரன் (பேரன்)**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603,**
**021 567 1532**

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# கொரோனா வைரஸ் பரம்பல் இலங்கையில் கட்டுப்பாட்டிலேயே உள்ளது

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் இலங்கையில் பரவலடையவில்லை. வைரஸ் நாட்டில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும், கொரோனா வைரஸின் ஆபத்து இலங்கையிலிருந்து முற்றிலுமாக அகற்றப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மேலும் 10 கொரோனா வைரஸ் தொற்றுக்கள் நேற்று நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் மூன்று ஒலுவில் தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அதன்படி, இலங்கையில் பதிவான மொத்த கொரோனா வைரஸ் தொற்றுகளின் எண்ணிக்கை 254 ஆக உயர்ந்துள்ளது.

இருப்பினும், கொரோனா வைரஸைப் பொறுத்தவரை இலங்கையின் நிலைமை நன்றாக உள்ளது என்று அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்தார். நேற்று மாலை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, கிராண்ட்பாஸ், கொட்டஹேன, மாளிகாவத்த மற்றும் புஞ்சி பொரெல்லவைச் சேர்ந்த 6 பேர் நேற்று தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர்.

கடற்படை புலனாய்வு அமைப்புகள் நடத்திய தேடுதல் நடவடிக்கையில், கொரோனா தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இந்த 6 பேரும் அடையாளம் காணப்பட்டு, வெலிசர மார்பு மருத்துவமனையின் தனிமைப்படுத்தப்பட்ட மையத்திற்கு அனுப்பப்பட்டனர்.

கொட்டஹேனவில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் இரண்டாவது மகனின் நெருங்கிய சகாக்களே இவர்கள்.

அவர்களில் மூன்று பேர் கிராண்ட்பாஸ் ஸ்ரீ இசிபதனராம கோயில் வீதியில் வசிப்பவர்கள். அந்தப் பெண்ணின் இரண்டாவது மகன் கிராண்ட்பாஸ் ஸ்ரீ இசிபதனராம கோயில் வீதிக்கு அடிக்கடி வருபவர்.



கொட்டஹேனவில் வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் கணவர் மற்றும் இரண்டு மகன்கள் நேற்று தொற்று டன் அடையாளம் காணப்பட்டனர். நேற்று அடையாளம் காணப்பட்ட ஆறு நபர்களில் மூவர் இவர்கள் என்றனர். (ம-3)

## கொரோனா COVID - 19

### இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 254 | 086 | 007 | 161 |

### உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 2,312,069 | 591,278 | 158,885 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 3,312,069 | 63,206 | 158,885 | +4,740 |
| ஐ.அமெரிக்கா | 728,293 | 18,558 | 38,244 | +1,090 |
| இத்தாலி | 175,925 | 4,491 | 23,227 | +482 |
| ஸ்பெய்ன் | 191,726 | 887 | 20,043 | +41 |
| சீனா | 82,719 | 27 | 4,632 | 0 |
| ஜேர்மனி | 142,872 | 1,475 | 4,426 | +74 |
| பிரான்ஸ் | 151,793 | 3,824 | 19,323 | +642 |
| ஈரான் | 80,868 | 1,374 | 5,031 | +73 |
| ஐ.இராச்சியம் | 114,217 | 5,525 | 15,464 | +888 |
| இந்தியா | 14,792 | 440 | 488 | +2 |

இன்று அதிகாலை 12.30 நிலைவரப்படி

உன் மனச்சாட்சியே, உலகத்தைப் பார்க்கிற
பெரியதும் உண்மையானதுமான நீதிபதி.
– மெக்கலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கவனமாக இருக்க வேண்டிய அஞ்ஞாதவாச காலம்

கௌரவர்களின் நிட்டூரத்தால் பாண்டவர்கள் 13 ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டியதாயிற்று.

13 ஆண்டுகளில் ஓர் ஆண்டு அஞ்ஞாத வாசமாகும்.

அஞ்ஞாதவாசம் என்பது எவருக்கும் தெரியாமல் மறைந்திருக்கின்ற காலம்.

இக்காலத்தில் பாண்டவர்களை யாரேனும் கண்டுவிட்டால், மீண்டும் 12ஆண்டுகள் வனவாசத்தை அனுபவிக்க வேண்டும் என்பது நியதி.

ஆக 12 ஆண்டுகள் என்ற வனவாச காலத்தைவிட ஓர் ஆண்டு அஞ்ஞாதவாச காலத்தை மிகவும் கவனமாகக் கடக்க வேண்டும் இது இதிகாசச் சரிதம்.

இப்போது கொரோனா தொற்றினால் கடந்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் இலங்கை மக்கள் வீடுகளுக்குள் முடங்கி இருக்கின்றனர்.

என்ன செய்வது மனிதரைக் கண்டால் எட்ட நிற்க வேண்டியதொரு சூழ்நிலையை இயற்கை விதித்துள்ளது.

அவ்வாறு யாரேனும் வெளியில் செல்வதாக இருந்தால்கூட பொலிஸ் அனுமதி பெற்றாக வேண்டும் என்பதுடன் முகக் கவசம் அணிந்து செல்வதும் கட்டாயமாகும்.

இவையெல்லாம் கொரோனா எனும் கொடிய தொற்று நோயில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள்.

இவை ஒருபுறமிருக்க, நாளை ஏப்ரல் 20 ஆம் திகதியில் இருந்து ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று உள்ள ஏழு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 18 மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது

இதில் வடக்கு மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கு தளர்த்தப்படுகிறது.

இங்குதான் மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

அதாவது ஒரு மாத கால ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படும்போது, மக்கள் முண்டியடித்து வெளியில் வருகின்ற சந்தர்ப்பங்கள் உண்டு.

இவ்வாறான முண்டியடிப்புகள் இதுகாறும் நாம் வீடுகளில் இருந்து கொரோனாத் தொற்று வராமல் பாதுகாத்ததை பாழாக்கி விடுவதாக இருக்கக் கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

அதாவது ஊரடங்கு அமுலில் இருந்த ஒரு மாத காலத்தை 12 வருட வனவாசமாகக் கருதினால், ஊரடங்கு தளர்த்தப்பட்ட முற்பகுதி அஞ்ஞாதவாசத்துக்கு ஒப்பானதாகும்.

ஆம், ஊரடங்கு முடிந்து விட்டது என்ற நினைப்பில்–மகிழ்வில் கொரோனாத் தொற்றை எவரும் மறந்து விடக்கூடாது.

தப்பித் தவறி யாருக்கேனும் கொரோனாத் தொற்று ஏற்படுமாயின் மீண்டும் ஊரடங்கு அமுலாவது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஆகையால் ஊரடங்குக் காலத்தைவிட ஊரடங்கு தளர்த்தப்பட்ட காலத்தில், மனிதர்களில் இருந்து மனிதர்கள் மறைந்தும் எட்டித்தும் இருப்பதே உத்தமமாகும்.

ஆகையால் நாம் அனைவரும் மிக அவதானமாகச் செயற்பட வேண்டிய காலம் இதுவாகும்.

# தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 222 பேர் நேற்றுக்காலை வெளியேறினர்



(ஏறாவூர்)

புனாணை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து மேலும் 222 பேர் மூன்று வார காலம் தனிமைப்படுத்தப்பட்ட செயன்முறைக்குப் பின்பு நேற்றுக் காலை தங்களது சொந்த இடங்களுக்குப் புறப்பட்டு சென்றனர்.

இராணுவத்தினரால் வழங்கப்பட்ட போக்குவரத்து வசதிகளுடன் கொழும்பு மற்றும் கடவத்த ஆகிய பிரதேசங்களை நோக்கிப் புறப்பட்ட குறித்த குழுவினருக்கு படையினரால் சிற்றுண்டி உணவுகள், குடிநீர் மற்றும் மதிய உணவுப் பொதிகள். விசேடமாக குழந்தைகள் மற்றும் சிறுவர்களைக் கருத்திற் கொண்டு வழங்கப்பட்டன.

குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தின் கட்டளை அதிகாரி, அதிகாரிகள் மற்றும் ஏனைய படையினர் உட்பட பலர், வெற்றிகரமாக இந்த தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்து புறப்பட்ட மக்களை வழியனுப்பி வைத்தனர். (இ)



## தபால் திணைக்களத்தின் உள்ளகப் பணி ஆரம்பம்

(கொழும்பு)

ஒரு மாத காலம் கொழும்பு மத்திய தபாலகத்தில் தேங்கிக் கிடந்த தபால்களை பரிமாற்றும் உள்ளக நடவடிக்கைகள் நேற்றுக்காலை ஆரம்பமாகின.

மத்திய மற்றும் பிராந்திய தபால் பரிமாற்றகத்தில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

3 இலட்சத்திற்கும் அதிகமான கடிதங்கள் தபால் திணைக்களத்தில் குவிந்து கிடப்பதாகவும் அவர் தெரிவித்தார். குறைந்தபட்ச ஊழியர்களை பயன்படுத்தி, கடிதங்களை வகைபிரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடிதங்கள் வகைபிரிக்கப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களுக்கு அவை அனுப்பிவைக்கப்பட வுள்ளன.

மருந்துப் பொருட்களை வீட்டிற்கே விநியோகிக்கும் செயற்பாடு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாகவும் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன மேலும் தெரிவித்தார். (இ)

## கொழும்பு துறைமுகத்தில் மட்டும் 26,000 கொள்கலன்கள் தேக்கம்!

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் மாத்திரம் சுமார் 26 ஆயிரம் கொள்கலன்கள் தேங்கியிருப்பதாக துறைமுக அதிகார சபை தெரிவித்தது.

துறைமுகத்தில் சுமார் 30 ஆயிரம் கொள்கலன்களைக் களஞ்சியப்படுத்தக் கூடிய வசதிகள் இருப்பதாக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

தற்போது துறைமுகத்தில் தேங்கியிருக்கும் கொள்கலன்களை அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதேவேளை கப்பல்களுக்குப் பொருட்களை ஏற்றுதல் மற்றும் இறக்கும் பணிகள் வழமையைப் போன்று இடம்பெறுகின்றன.

இதற்கான போதியளவான ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஊரடங்கில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் மற்றும் கல்லாற்று பகுதியில் சட்டவிரோத மதுபான கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. எனினும் ஒருவர் தப்பிச்சென்றுள்ளார். தப்பிச்சென்றவரை கைதுசெய்யும் நடவடிக்கையை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அண்மைக்காலமாக கசிப்பினை உற்பத்தி செய்வதற்காக சீமெந்து மற்றும் கம்பித்துண்டுகள் என்பன பயன்படுத்தப்படுவதாக விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார்



## அனைத்து அரச அதிபர்களுக்கும் ஜனாதிபதி செயலகம் அழைப்பு

(கொழும்பு)

அனைத்து மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டனர்.

நாட்டின் தற்போதய நிலைமை குறித்து மீளாய்வு செய்ய இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக பொது நிர்வாகம்,உள்துறை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியா ராச்சி தெரிவித்தார்.

அரச நிறுவனங்களில் எவ்வாறு கடமைகளை மீண்டும் ஆரம்பிப்பது என்பது குறித்து இதன் போது தீர்மானிக்கப்படும்.

அதன் பின்னர் குறைந்த எண்ணிக்கையிலான அத்தியாவசிய ஊழியர்களின் பங்களிப்புடன் முதற் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில் அரச நிறுவனங்களில் கடமைகளை ஆரம்பிப்பது தொடர்பாக அடுத்த வாரம் விசேட சுற்றறிக்கை வெளியிடப்படும் என்றும் பொது நிர்வாக அமைச்சு தெரிவித்தது. (இ)

## குழந்தைகளுக்கு தடுப்பூசி வழங்கும் பணி விரைவில்

(கொழும்பு)

குழந்தைகளுக்கான நோய்த் தடுப்பு ஊசிகளை வழங்கும் பணிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றுநிருபமும் தன்னால் வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மேலும் சில தினங்களில் தளர்த்தப்படவுள்ள ஊரடங்குச் சட்டத் தின் பின்னர், வைத்தியசாலைகளும் சில விதிமுறைகளுக்கு அமைய பணிகளை ஆரம்பிக்கவுள்ளன.

இதன்போது குழந்தைகளுக்கான நோய்த்தடுப்பூசிகளை ஏற்றும் சந்தர்ப்பங்களில் தாயும் குழந்தையும் மாத்திரம் வைத்தியசாலைக்கு வருகை தருவது சிறப்பானதாகும்.

மேலும் குறித்த சந்தர்ப்பத்தில் வைத்தியசாலைகளில் இருப்போரின் எண்ணிக்கையைக் குறைந்த ளவில் பேணுவதைத் தங்களால் உறுதிசெய்து கொள்ள முடியுமெனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ)

## சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிப்பு

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ்பிரிவுக்குட்பட்ட கல்மடுக்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 நபர்கள் கிளிநொச்சிமாவட்டக்குற்றத் தடுப்புப் பிரிவுப்பொறுப்பதிகாரி D.m சதுரங்கதலைமையிலான அணியினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் 17.04.2020 அன்று கைது செய்யப்பட்டு தருமபுர பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர்கள் ஒப்படைக்கப்பட்டதோடு அவர்கள் வைத்திருந்த 3 உழவு இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.(இ-316)



# கொரோனா அச்சம்! சவாலை வெற்றிகொள்ள முப்படையினர், பொலிஸார் தயார் நிலையில்

## திருகோணமலையில் பாதுகாப்புச் செயலர் திட்டவட்டம்

(திருகோணமலை)

தேசிய பாதுகாப்புக்கு சவாலாக அமைகின்ற எந்தவொரு செயற்பாட்டையும் வெற்றிகொள்ள ஒருபோதும் பின் நிற்கப் போவதில்லை என்றும் அவற்றைத் துணிச்சலோடு எதிர் கொள்ள முப்படையினர் உட்பட பொலிஸார் தயாராக இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

திருகோணமலையில் அமைந்துள்ள இராணுவத்தின் 22 ஆவது படைப்பிரிவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்ட போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் உலக ளாவிய ரீதியில் பரவிய போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ், ஜனவரி 26 ஆம் திகதி விசேட கூட்டமொன்றை நடத்தி அன்றைய தினமே கொரோனா தொடர்பான குழுவொன்றை ஏற்படுத்தியதாகவும் அந்தக் குழுவை நியமித்து ஒரு நாளின் பின்னர் சீன நாட்டுப் பிரஜை ஒருவர் முதலாவதாக அடையாளம் காணப்பட்டதாகவும் அதன் பின்னர் இந்நோயிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வலுவான பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட்டதாகவும் அதனால் அபிவிருத்தியடைந்த நாடுகள் இன்று கொரோனாவிலிருந்து மீள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடாகிய எமது நாடு அதற்கெதிரான செயற்பாடுகளில் பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

இதனால் எமது நாடு ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றது. இதற்கு ஜனாதிபதி, அரசாங்கம், சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சு உட்பட பல நிறுவனங்கள் ஒருங்கிணைந்து தமது சேவையை அர்ப்பணிப்புடன் செய்தமை மூல காரணமென்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு எவ்வாறு கொரோனாவை ஒழிக்க முடியும் என்று சில சக்திகள் கேட்டதாகவும் சுகாதாரத்துறை மருத்துவ வசதிகளை வழங்கிய போதும் அதனோடு தொடர்புடைய இணைந்த சேவைகளை வழங்க கொரோனா நோயாளிகள் தொடர்பான விபரங்களை கண்டறிய அவர்களது பின்னூட்டல் செயற்பாடுகள் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சு தனது ஒத்துழைப்பை பாரியளவில் வழங்கியமை மிக முக்கியமானது என்றும் இதன் போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

முதற் கட்டமாக ஈரான் தென் கொரியா இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து தாய்நாட்டுக்கு வருகை தந்தவர்களை தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்த முயற்சித்தபோது அவர்கள் அதற்கு பாரிய எதிர்ப்பை தெரிவித்தார்கள்.

அது மாத்திரமல்லாமல் அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து செல்ல தனியார் பேருந்துகளை சுகாதார அமைச்சு வாடகைக்கு அமர்த்திய போது தனியார் பேருந்து உரிமையாளர்கள் குறித்த நபர்களுக்குக் கொரோனா தொற்று இருக்கும் என்ற பயத்தால் அந்த சேவையை வழங்குவதிலிருந்து விடுபட்டார்கள்.

இருப்பினும் இலங்கை இராணுவம் குறித்த சேவையை வழங்க முன்வந்ததுடன் அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்து வருகின்ற சந்தர்ப்பத்தில் இடையிலே தம்புள்ள மைதானத்தில் அவர்களுக்குரிய கழிப்பறை மற்றும் சிறு ஓய்வு வழங்கியபோது அவர்களுக்கு நாம் சிற்றுண்டியை வழங்கினோம்.


அந்தச் சந்தர்ப்பத்தில் முகப்புத்தகம் ஊடாக எமக்கு இலங்கை இராணுவம் வெறுமனே மென்பொருள் குடிபானத்தை மாத்திரம் வழங்கியதாக பதிவு செய்தார்கள். அதனைத்தொடர்ந்து அவர்களை நாம் கந்தக்காடு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு கொண்டு சென்று பேருந்திலிருந்து இறங்குங்கள் என்று குறிப்பிட்டபோது யாரும் அந்த இடத்தில் இறங்க முன்வரவில்லை. அவர்களுடைய காலில் விழாத மாத்திரம்தான். எவ்வாறாவது இங்கே இறங்குங்கள் என்று நாம் கூறினோம்.

இறுதியாக அவர்கள் இறங்கினார்கள். எம்மைத் திட்டினார்கள், அவற்றை எல்லாவற்றையும் நாம் பொறுத்துக்கொண்டு அளப்பரிய சேவையை செய்தோம். இருப்பினும் தனிமைப்படுத்தல் முடிவடைந்து செல்லும்பொழுது அவர்கள் நாம் நடத்திய விதத்தை வெகுவாகப் பாராட்டியதை ஊடகங்கள் வாயிலாக மக்கள் அறிந்துகொண்டார்கள். எனவே பாதுகாப்பு அமைச்சு என்ற அடிப்படையில் எத்தகைய சவாலையும் எதிர் கொண்டு அவற்றை முறியடித்து நாட்டு நலனை முதன்மைப்படுத்தி நாட்டு மக்களைப் பாதுகாக்க தாம் உட்பட சகல படைவீரர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)






# நுரையீரல் மட்டுமல்லாது மற்றொரு உறுப்பையும் கொரோனா தாக்கும்



## பரபரப்புத் தகவல் வெளியீடு



(டில்லி)

கொரோனா வைரஸானது நுரையீரலை மட்டுமல்லாது மற்றொரு உறுப்பையும் தாக்கும் என வெளியாகிய புதிய தகவலால் பரபரப்பு ஏற்பட்டது.

உலகமெங்கும் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொற்று நோய், நோயாளிகளின் நுரையீரலைப் பாதித்து விடுகிறது. இதனால் சுவாசிக்க முடியாத நிலைக்கு நோயாளிகள் தள்ளப்பட்டு நிலைமை மோசமாகிறது.

இதுபற்றிய விழிப்புணர்வு இப்போது ஓரளவுக்கு எல்லோருக்கும் வந்து விட்டது.

இந்நிலையில், இந்த வைரஸ் நுரையீரலை மட்டுமல்லாது சிறுநீரகத்தையும் பாதிக்கும் என்று வைத்திய நிபுணர்கள் எச்சரித்தனர்.

சர்வதேச சிறுநீரக அமைப்பு இது தொடர்பாக ஒரு அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில்,

- 25 முதல் 50 சதவீத கொரோனா நோயாளிகளுக்கு சிறுநீரகமும் பாதிக்கிறது. 'அக்கியூட் கிட்னி இன்ஜ்ரி' என்ற கடுமையான சிறுநீரக காயம் ஏற்படுகிறது.

எனவே கொரோனா வைரஸ், பாதிப்புக்கு ஆளாகிறவரின் நுரையீரல் மட்டுமல்ல, சிறுநீரகமும் பாதிக்க வாய்ப்புள்ளது.

- சார்ஸ் வைரஸ் போன்ற கொரோனா வைரஸ் சிறுநீரில் கூடுதலான அளவு இரத்தத்தையும் புரதத்தையும் கசிய செய்கிறது. இது 15 சதவீத நோயாளிகளுக்கு சிறுநீரகத்தில் கடுமையான காயத்தை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மும்பை அப்பலோ வைத்தியசாலை வைத்திய நிபுணர், வைத்தியர் துஷார் பர்மர் தெரிவிக்கையில்,

பொதுவாகவே கொவிட்-19 (கொரோனா) வகை வைரஸ்கள் சுவாச அமைப்புக்களில் (நுரையீரலில்) இருந்து தோன்றுவதாக அறியப்படுகிறது.

இந்நிலையில், இப்போது வெளியாகி வரும் சான்றுகள், கொரோனா வைரஸ் நுரையீரலை மட்டுமின்றி சிறுநீரகத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் காட்டுகின்றன.

சார்ஸ் மற்றும் மெர்ஸ் கோவ் தொற்றுகளைப் பற்றிய முந்தைய அறிக்கைகள், 5 முதல் 15 சதவீதம் பேருக்கு சிறுநீரகத்தில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தின. இதில் 60 முதல் 90 சதவீதம்பேர் இறந்து விடுகின்றனர் என்பதை காட்டுகின்றன.

கொரோனா வைரஸைப் பொறுத்தமட்டில் ஆரம்பத்தில் 3 முதல் 9 சதவீதம் பேருக்கு சிறுநீரகத்தில் கடும் பாதிப்பு ஏற்படுவது தெரிய வந்தது. ஆனால் பின்னர் வந்த அறிக்கைகள், அதை விட கூடுதலான பேருக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்படுவதைக் காட்டுகின்றன.

கொரோனா வைரஸ் பாதித்த 59 பேரை, அவர்கள் வைத்தியசாலையில் இருந்தபோது ஆய்வு செய்ததில், அவர்களில் மூன்றில் இரு பங்கு நபர்களுக்கு (19 பேருக்கு) சிறுநீரில் அதிகளவு புரதம் கசிந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது என அந்த வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார். (இ)

# வெள்ளவத்தையில் கத்திக்குத்து ஒருவர் பலி!

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்தனர்.

இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக சந்தேக நபர் மற்றைய நபரை கத்தியால் குத்தினார்.

இதனால்,பலத்த காயமடைந்த குறித்த நபர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் வெள்ளவத்தை ஸ்வர்ணா வீதியில் வசித்த 34 வயதுடைய நபர் ஆவார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (இ)

# சுயதனிமைப்படுத்தலை நிறைவு செய்யாதோரை மேலதிக கண்காணிப்புக்குட்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவலிலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் கடந்த மார்ச் 17 ஆம் திகதி, பொலிஸாரின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பிக்கப்பட்ட சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் இதுவரை 62 ஆயிரம் பேர் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ஜாலிய சேனாரட்ன தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு விடயங்களைத் தெளிவுபடுத்தும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்தி கண்காணிக்கும் நடவடிக்கைகளை பொலிஸார் கடந்த மார்ச் 17 ஆம் திகதி முதல் ஆரம்பித்தனர்.

தற்போது அந்நடவடிக்கைக்கு ஒரு மாதம் பூர்த்தியாகியுள்ளது. இந்நிலையில் இதுவரை ஒரு மாதத்தில் 62 ஆயிரம் பேர் வரை சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டனர்.

இவர்களில் 39 ஆயிரம் பேர் வரை தற்போது தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்துள்ளனர். மேலும் 23 ஆயிரம் பேர் வரை தொடர்ந்து சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் கீழ் கண்காணிப்பில் உள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் தனிமைப்படுத்தல் காலத்தின் பின்னரும் சில கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த பின்னணியில், பதில் பொலிஸ் மா அதிபரின் விசேட உத்தரவுக்கு அமைய தனிமைப்படுத்தல் காலத்தின் பின்னர், சுயதனிமைப்படுத்தலை நிறைவு செய்தோரை கண்காணிக்கும் விசேட பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் அந்தந்த பொலிஸ் பிரிவுகளில் இந் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன், அவ்வாறு தனிமைப்படல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்த எவருக்கேனும் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகள் தென்பட்டால், அல்லது அது சார்ந்த சந்தேகங்கள் எழுந்தால் அந்த பொலிஸ் நிலையம் ஊடாக உரிய சுகாதார அதிகாரிகளை இணைத்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# கொரோனா வைரஸை அழிக்கும் புதிய கிருமிநாசினி கண்டுபிடிப்பு

## அண்ணா பல்கலைக்கழகம் அசத்தல்

(சென்னை)

கொரோனா வைரஸை முற்றாக அழிக்கும் கிருமிநாசினி ஒன்றை சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மாணவர்கள் கண்டுபிடித்து சாதனை படைத்தனர்.

சீனாவில் பரவ ஆரம்பித்த கொரோனா வைரஸ் தற்பொழுது உலகில் இரண்டு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களைப் பாதித்து, ஒன்றரை இலட்சத்துக்கும் மேலானவர்களை உயிர்ப் பலி வாங்கி அச்சுறுத்தி வருகிறது.

இந்த வைரஸை எப்படி ஒழிப்பது எனத் தெரியாமல் உலக நாடுகள் தவித்து வருகின்றன. இந்த வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு வேகமாகப் பரவுகிறது.

இதைத் தடுக்க கிருமிநாசினியை பயன்படுத்தவேண்டும் என்று வைத்தியர்கள் வலியுறுத்தி வருகின்றனர். கிருமிநாசினியை பயன்படுத்தினால் அவற்றிலிருந்து நம்மைத் தற்காத்துக் கொள்ளலாம். ஆனால் வைரஸை அழிக்க முடியாது.

இந்நிலையில் சென்னை அண்ணா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் குழு, கொரோனா வைரஸை முழுமையாக அழிக்கும் "ஏ.யூ சானிடைசர்" என்ற புதிய கிருமிநாசினியைக் கண்டுபிடித்தனர்.

இப்பல்கலைக்கழகத்தின் N.H.H.I.T என் ஹெச் எச்.ஐ. எனப்படும் சுகாதார கருவிகள் மேம்பாட்டுக்கான தேசிய மையம் இந்தக் கிருமி நாசினியைக் கண்டுபிடித்தது.

இது தொடர்பாக அந்த மையத்தைச் சேர்ந்த பேராசிரியர் சங்கர் தெரிவிக்கையில்,

"நாங்கள் உருவாக்கிய கிருமி நாசினி கொரோனா வைரஸை அழிப்பதை அதன் மரபணு சோதனை மூலம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

ஏனெனில் கொரோனா வைரஸும் நாங்கள் தயாரித்த கிருமி நாசினியும் ஒரே அமிலத்தை கொண்டுள்ளன. இது வைரஸை முற்றாக அழிக்கிறது.

நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள் ஆகியோரிடமும் வைரஸ் பரவ அதிக வாய்ப்புள்ளது. அவர்கள் இந்தக் கிருமி நாசினி பயன்படுத்தினால், வைரஸ் பரவாமல் தடுப்பதுடன், முற்றாக அழித்து விடவும் முடியும்.

இந்தக் கிருமி நாசினியை கைகள், உடல் பகுதிகள், முகக்கவசங்கள், கையுறைகள், மருத்துவ உபகரணங்கள் என எதிலும் பயன்படுத்தலாம்.

இப்போது பயன்பாட்டிலுள்ள கிருமிநாசினிகளுடன் இந்தப் புதிய கிருமி நாசினியை சிறிதளவு கலந்தால் போதுமானது. இதனால் புதிய கிருமி நாசினியின் விலை அதிகரிப்பு குறைவாகவே இருக்கும்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் இந்தக் கிருமி நாசினியை தெளித்தால், அல்லது மூக்கில் சில துளிகள் விட்டால், வைரஸ் மற்றவர்களுக்குப் பரவாது, தடுக்கப்பட்டு விடும். வைரஸும் அழிந்துவிடும்.

இதை இருநூறுக்கும் மேற்பட்டவர்களிடம் பயன்படுத்தியதில், நல்ல பலன் கிடைத்துள்ளது. இந்தக் கிருமிநாசினிக்கு காப்புரிமை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

கொரோனாவை முழுமையாகக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகளுடன் இணைந்து செயற்பட அண்ணா பல்கலைக்கழகம் தயாராகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)



## அரசின் கட்டுப்பாடுகளை புறக்கணித்த இவாங்கா

(வோஷிங்டன்)

அமெரிக்க அரசின் கட்டுப்பாடுகளை புறக்கணித்து விட்டு இவாங்கா ட்ரம்ப், நியூஜெர்சிக்கு பயணம் மேற்கொண்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் மகள் ,வாங்கா ட்ரம்ப் (வயது- 38)

இவர் வோஷிங்டன் வெள்ளை மாளிகையில், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக உள்ளார்.

இவரது கணவர் ஜாரெட் குஷ்னரும், ஜனாதிபதியின் ஆலோசகராக இருக்கிறார்.

அமெரிக்காவில் தற்போது கொரோனா வைரஸ் காட்டுத்தீ போல பரவி வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

வோஷிங்டனில் கடந்த முதலாம் திகதி முதல், பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து பயணம் மேற்கொள்ள கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இது விருப்ப பயணங்கள் மேற்கொள்ளவும், ஷாப்பிங் பயணங்கள் செய்யவும், சமூக பயணங்கள் செல்லவும் தடை விதிக்கிறது.

"வீடுகளில் தங்கி ,ருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பது அதிர்ஷ்டம் தான். தயவுசெய்து எல்லோரும் வீட்டில் ,ருங்கள்" என்று இவாங்கா ட்ரம்ப் ஒரு காணொலி செய்தியை மார்ச் மாத இறுதியில் வெளியிட்டார்.

சமூக இடைவெளியைப் பின்பறறும் வகையில் அனைவரும் வீடுகளுக்குள் இருக்குமாறு கேட்டுக் கொண்டார், தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டவர்களுக்கு நன்றி என்றும் தெரிவித்துக் கொண்டார்.

இது மக்கள் அனைவரும் வீடுகளுக்குள் இருப்பதற்கு ஊக்கமாக அமைந்தது.

ஆனால், அரசு பிறப்பித்த கட்டுப்பாடுகளை மீறி, இவாங்கா ட்ரம்பும், அவரது கணவர் ஜாரெட் குஷ்னரும், தங்களது 3 குழந்தைகளுடன் நியூஜெர்சி மாகாணத்திலுள்ள பெட்மினிஸ்டர் கோல்ப் கிளப் சொகுசு விடுதிக்குப் பயணம் மேற்கொண்டு பாஸ்காவின் (யூத விடுமுறை) முதல் இரவைக் கொண்டாடினர்.

இதுபற்றிய தகவல்கள் முதலில் நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஜாரெட் குஷ்னர், நியூஜெர்சி பயணத்தை முடித்துக் கொண்டு வோஷிங்டன் வெள்ளை மாளிகைக்கு திரும்பிவிட்டார். கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

ஆனால் இவாங்கா, குழந்தைகளுடன் பெட்மினிஸ்டரில் தங்கிவிட்டார். அங்கிருந்தவாறு தொலைபேசி அழைப்புக்களை ஏற்று பேசுகிறார். குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுகிறார்.

இது குறித்து வெள்ளைமாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், ",வாங்கா ட்ரம்ப் வர்த்தக ரீதியிலான பயணம் மேற்கொள்ளவில்லை. அவர் குடும்பத்துடன் விடுமுறையை தனிப்பட்ட முறையில் கழிக்க முடிவு செய்தார்" எனத் தெரிவிக்கப்பட்டது.

நியூஜெர்சியிலும் எல்லோரும் வீடுகளுக்குள் இருக்கிற வகையில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)



## 5,000 பேருந்துகள், 400 புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் தீர்மானம்



(கொழும்பு)

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் புகையிரதங்கள் மற்றும் பேருந்துகளை பொதுப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர இதனைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளின் கீழ் வரும் தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்டால் பொதுப் போக்குவரத்தை இயக்க போக்குவரத்து அமைச்சகம் நேற்று முன்தினம் தீர்மானம் எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

## ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட 29 நாட்களில் 31 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிக்கினர்

## 8 ஆயிரத்து 151 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறியமை தொடர்பில் கடந்த 29 நாட்களுக்குள் 31 ஆயிரத்து 690 பேர் கைது செய்யப்பட்டனர். இதன் போது 8 ஆயிரத்து 151 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அதற்கமைய, ஊரடங்கு காலத்தில் பயணிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இன்றி நடமாடியமை, சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விநியோகம், அத்தியாவசியசேவை எனக்கூறி போலியாகச் செயற்பட்டமை போன்ற விடயங்கள் தொடர்பிலே அதிகளவானோர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

கொவிட் - 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 6 மணிமுதல் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் மக்கள் தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிறு கால அவகாசம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள் அறிவித்தல் வரை ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதுடன் ,சில பகுதிகள் முற்றாக முடக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று சனிக் கிழமை காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் மாத்திரம் 1392 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 381 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அதற்கமைய ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு கடந்துள்ள 29 நாட்களுக்குள் மாத்திரம் 31 ஆயிரத்து 690 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள் ,கார், ஆட்டோ மற்றும் சொகுசு வாகனங்கள் உள்ளிட்ட 8151 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் பொறுப்பேற்பதுடன், அவை வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதன் பின்னர் உரிய தரப்பினரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை குறித்த வாகனங்கள் தொற்று நீக்கம் தொடர்பான போக்குவரத்து செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# முடக்கல் நிலைக்கு எதிராக மக்களைக் கிளர்ச்சி செய்ய ட்ரம்ப் அதிர்ச்சி வேண்டுகோள்




(வோஷிங்டன்)

அமெரிக்காவின் பல மாநிலங்களில் நீடிக்கும் முடக்கல் (ஊரடங்கு) நிலைக்கு எதிராக மக்களை கிளர்ச்சி செய்யத் தூண்டும் விதத்தில் டுவிட்டர் பதிவுகளை வெளியிட்ட ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது செயலை நியாயப்படுத்தினார்.

ஜனநாயகக் கட்சியின் ஆளுநர்கள் உள்ள மூன்று மாநிலங்களான மிச்சிகன், வேர்ஜினியா மினொசொட்டா ஆகிய மாநிலங்களிலேயே முடக்கல் நிலைக்கு எதிராக மக்களைத் தூண்டும் விதத்தில் ட்ரம்ப் டுவிட்டரில் பதிவிட்டார்.

மினொசொட்டாவை விடுதலை செய்யுங்கள், மிச்சிகனை விடுதலை செய்யுங்கள், வேர்ஜினியாவை விடுதலை செய்யுங்கள் என ட்ரம்ப் டுவிட்டரில் பதிவு செய்தார்.

முடக்கல் நிலைக்கு எதிரான போராட்டங்கள் இந்த மாநிலங்களில் இடம்பெற்றுவரும் நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு பதிவிட்டார்.

இதேவேளை, மக்கள் பெருமளவில் ஒன்று கூடுவதால் நோய் பரவக்கூடும், ஆர்ப்பாட்டக்காரர்களால் கோவிட் - 19 நோய் பரவக்கூடும் என்ற அச்சத்தை ட்ரம்ப் நிராகரித்தார்.

இந்த மக்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுகின்றனர் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனநாயகக் கட்சியின் ஆளுநர்களையும் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்தார். (இ)

# சீனாவில் திடீரென உயிரிழப்பு உயர்வு மேலும் 27 பேருக்கு கொரோனா உறுதி



(பீஜிங்)

சீனாவில் கொரோனா வைரஸால் இறந்தவர்களின் பட்டியலில் கூடுதலாக 1290 பேர் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் புதிதாக யாரும் உயிரிழக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வரும் கொரோனா வைரஸ் 210 நாடுகளுக்குப் பரவி ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்டோரின் உயிர்களைக் காவுவாங்கியது. சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால், வுஹான் நகரில் அதிகளவு உயிரிழப்பு ஏற்பட்டது.

வைரஸ் பரவத் தொடங்கியது முதல் ஊரடங்கு உட்பட பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட சீன அரசு வைரஸ் பரவும் வேகம் மற்றும் பலி எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்தது.

குறிப்பாக பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர் அந்நாட்டில் வைரஸுக்கு உயிரிழப்போரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வந்தது. மேலும், கடந்த சில நாட்களாக வைரஸ் தாக்குதலுக்கு எந்த உயிரிழப்புக்களும் ஏற்படவில்லை என்ற நிலைக்கு வந்தது. இதனால் நிம்மதியடைந்த சீன அரசு ஹுபேய் மாகாணத்தில் ஊரடங்கைத் தளர்த்தி பொதுப் போக்குவரத்துக்கு அனுமதியளித்தது. கொரோனாவைக் கட்டுப்படுத்திவிட்டதாகவும் அரசு அறிவித்தது.

கடந்த 16 ஆம் திகதி நிலவரப்படி மொத்த உயிரிழப்பு 3342 என்ற அளவில் இருந்தது. புதிய நோய்த்தொற்றும் வெகுவாகக் குறைந்திருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்பு தொடர்பான திருத்தப்பட்ட புள்ளிவிபரம் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

அதில் வுஹான் நகரில் உயிரிழப்பு ஏற்கனவே இருந்ததைவிட 50 சதவீதம் உயர்ந்திருப்பதாக குறிப்பிடப் பட்டிருந்தது அனைவரையும் அதிர்ச்சியடைய வைத்தது.

வுஹான் நகரில் ஊரடங்குக் காலத்தின்போது வைத்தியசாலைக்கு வெளியே இறந்தவர்கள் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தலின்போது இறந்தவர்களின் பெயர்கள் விடுபட்டதாகவும் அந்த வகையில் வுஹான் நகரில் இறந்தவர்களின் பட்டியலில் மேலும் 1290 பேர் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம் நாடு முழுவதும் மொத்தம் 4632 பேர் பலியாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலம் கொரோனா வைரஸ் விவகாரத்தில் உண்மையாக உயிரிழந்தோரின் எண்ணிக்கையை சீனா மறைக்கிறதோ? என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில் சீனாவில் நேற்று முன்தினம் கொரோனாவால் புதிய உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் புதிதாக 27 பேருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்தது.

புதிய நோயாளிகளில் 17 பேர் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மொத்தம் 82 ஆயிரத்து 719 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. புதிதாக பரிசோதனை செய்யப்பட்டு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 54 பேருக்கு எந்த அறிகுறியும் இல்லை. இவ்வாறு நோய் அறிகுறிகள் இல்லாமல் மொத்தம் 1017 பேர் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்' என்றும் தேசிய சுகாதார ஆணையம் மேலும் தெரிவித்தது. (இ)

# அமெரிக்காவில் கொரோனாவால் ஒரேநாளில் 2,500 பேர் மரணம்! 7 இலட்சம் பேர் பாதிப்பு



(நியூயோர்க்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 7 இலட்சத்தைக் கடந்தது. மேலும் வைரஸுக்கு நேற்று முன்தினம் மட்டும் 2 ஆயிரத்து 500 பேர் பலியாகினர்.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் அமெரிக்காவில் கோரத்தாண்டவமாடி வருகிறது. உலகளவில் வைரஸ் பரவியவர்கள், பலி எண்ணிக்கையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் அந்நாட்டில் வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 7 இலட்சத்தைக் கடந்தது.

நேற்றுக்காலை நிலவரப்படி, அமெரிக்காவில் 7 இலட்சத்து 9 ஆயிரத்து 735 பேருக்கு கொரோனா பரவியது உறுதியானது. குறிப்பாக நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிதாக 32 ஆயிரத்து 165 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் 2 ஆயிரத்து 535 பேர் பலியாகினர். இதனால் அமெரிக்காவில் கொரோனாவுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 37 ஆயிரத்து 154 ஆக அதிகரித்தது. (இ)

# இங்கிலாந்து முதியோர் இல்லங்களில் 1,400 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

(லண்டன்)

இங்கிலாந்தின் முதியோர் இல்லங்களில் மட்டும் இதுவரை 1,400 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பலியாகினர்.

அமெரிக்கா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், போன்றே கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு இங்கிலாந்தும் அதிகமான உயிர்ப்பலி கொடுத்தது.

அந்நாட்டில் சுமார் 2 ஆயிரம் முதியோர் இல்லங்கள் உள்ளன.

இவற்றில் 70 ,ற்கும் மேற்பட்ட இல்லங்களில் மட்டும் கடந்த ஒரு மாதத்தில் 521 முதியோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தனர்.

பீட்டில்பரோ நகரிலுள்ள ஒரு இல்லத்தில் 24 முதியவர்கள் கடந்த 10 நாட்களில் கொரோனாவால் பலியாகினர்.

ஒரேநாளில் 6 பேர் பலியானதும் இதில் அடங்கும். (இன்னும் 8 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர்) அதாவது, இந்த இல்லத்தில் சராசரியாக 6 பேருக்கு ஒருவர் உயிரிழந்தார்.

இங்கிலாந்தின் முதியோர் இல்லங்களில் மட்டும் இதுவரை 1,400 பேர் கொரோனாவுக்கு பலியாகிவிட்டதாக அதிகாரபூர்வ புள்ளிவிபரம் தெரிவித்தது.

ஆனால் அந்நாட்டின் அல்சைமர்ஸ் என்ற அமைப்பு இந்த எண்ணிக்கை 2,500 ஆக இருக்க வாய்ப்புள்ளது எனச் சுட்டிக்காட்டியது.

அதேநேரம், அரசாங்கம் வெளியிடும் கொரோனா பாதிப்பால் இறந்தவர்கள் பட்டியலில் முதியோர் இல்லங்களின் உயிர்ப்பலி சேர்க்கப்படுவதே இல்லை என்ற சமூக ஆர்வலர்களின் குற்றச்சாட்டும் இதற்கு வலுச் சேர்ப்பதாகவுள்ளது.

இதேவேளை முதியோர் இல்லங்களின் நிர்வாகத்தினர் மீதும் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

இதுபற்றி ரோனா ஒயிட் என்ற பெண் கண்ணீர் மல்க கூறுகையில், "முதியோர் இல்லங்களில் யாருமே சரியாகக் கவனிப்பதில்லை. வயதானவர்கள்தானே, செத்தால் சாகட்டும் என்று நினைக்கிறார்கள். எனது 86 வயது தாயாரும் இல்லத்தின் நிர்வாகிகளின் அலட்சியத்தால்தான் உயிரிழந்தார். இது மிகப்பெரிய குற்றம்" என்று குமுறினார்.

இதற்கிடையே பெரும்பாலான முதியோர் இல்லங்களில் முறையான பரிசோதனை நடத்துவதற்கு முன்பாகவே ஏராளமானோர் கொரோனா தாக்கி பலியாகிவிட்டனர் என்ற தகவலும் வெளியாகியது.

இதையடுத்து முதியோர் இல்லங்களில் கொரோனா பரிசோதனையை இங்கிலாந்து அரசு தீவிரமாக முடுக்கிவிட்டது. (இ)

# கொரோனாவால் ஆபிரிக்க நாடுகளில் 3 இலட்சம் பேர் உயிரிழக்கும் ஆபத்து ஐ.நா.அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஆபிரிக்க நாடுகளில் 3 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்த வருடம் உயிரிழப்பார்கள் என ஐ.நா.அமைப்பு எச்சரிக்கை விடுத்தது.

ஐ.நாவின் ஆபிரிக்காவிற்கான பொருளாதார ஆணைக்குழுவே இந்த எச்சரிக்கையை விடுத்தது.

தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப்படாவிட்டால் மோசமான சூழ்நிலையில் கொரோனா வைரஸால் 3 மில்லியன் பேர் உயிரிழப்பார்கள் எனவும் 1.2 பில்லியன் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்படுவார்கள் எனவும் அந்த அமைப்பு தெரிவித்தது. வறுமை, நகரங்களில் மக்கள் நெருக்கமாக வாழுதல், பரந்துபட்ட சுகாதார நெருக்கடி காரணமாக ஆபிரிக்கா வைரஸ் காரணமாக அதிகளவு பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை 18 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



எனினும் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது என நிபுணர்கள் அச்சம் வெளியிட்டனர். (இ)

# கொரோனா தோற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும்!

## ட்ரம்பிடம் அமெரிக்க எம்.பி.க்கள் கோரிக்கை



**(வோஷிங்டன்)**

**கொடிய கொரோனா வைரஸின் தோற்றம் குறித்த விவகாரத்தில் சர்வதேச அளவில் வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்பிடம் அமெரிக்க எம். பி.க்கள் கோரிக்கை விடுத்தனர்.**

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு, அந்த நாட்டின் செல்வாக்கு மிக்க குடியரசுக் கட்சியின் செனட் சபை எம்.பி. மார்கோ ரூபியோ தலைமையிலான எம்.பி.க்கள் கூட்டாக ஒரு கடிதம் எழுதினர்.

அந்தக் கடிதத்தில் "கொரோனா வைரஸின் தோற்றம், உலக சுகாதார நிறுவனத்தின் பக்கச் சார்பான நடவடிக்கை என்பன பற்றி வெளிப்படையான விசாரணையைத் தொடர நட்பு நாடுகளான ஜப்பான், தென்கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

இந்தக் கடிதத்தில், மார்ஷா பிளாக்பர்ன், தாம் டில்லிஸ், ஜான் கார்னின், ரோஜர் விக்கர், டெட் குரூஸ், டான் சல்லிவன், மைக் லி ஆகிய எம்.பி.க்கள் கையெழுத்திட்டனர்.

கடிதத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

- சீனாவின் வுஹானில் தோன்றிய கொரோனா வைரஸ் தொற்று நோயை ஆரம்பத்தில் இருந்தே சீன கம்யூனிஸ்ட் கட்சி மறைப்பதற்கும் திசை திருப்புவதற்கும் மட்டுமின்றி அமெரிக்காவையே நேரடியாகக் குற்றம் சாட்டுவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.
- கொரோனா வைரஸ் தொற்றுநோய், கட்டுப்பாட்டுக்குள் வந்தவுடன், அது எங்கே தோன்றியது என்பது பற்றியும் உலக சுகாதார நிறுவனம் உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புக்களை சீனா தனக்கு ஆதரவாக தவறாக பயன்படுத்துவது பற்றியும் உண்மையான, முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.
- இது தொடர்பாக நமது நட்பு நாடுகளான ஜப்பான், தென் கொரியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் நமது வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோவும், அமெரிக்க நிர்வாகமும் இணைந்து பணியாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் விசாரணைக்காக சர்வதேச அளவில் ஒருங்கிணைப்பதற்காக நீங்கள் ஒரு உயர்மட்ட குழுவை அமைக்க வேண்டும்.
- விசாரணையானது, கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியபோது, உலக சுகாதார நிறுவனம், முடிவு எடுத்தது பற்றிய விரிவான புரிதலுக்கும் வழிவகுக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலை மறைப்பதற்கு உலக சுகாதார நிறுவனத்துக்கு சீனாவிடமிருந்து அழுத்தம் வந்ததா? என்பது குறித்தும் விசாரிக்கப்பட வேண்டும். விசாரணையானது வெளிப்படையாக இருக்க வேண்டும் இவ்வாறு அந்தக் கடிதத்தில் அமெரிக்க எம்.பிக்கள் மேலும் வலியுறுத்தினர்.

கொரோனா வைரஸ் விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார நிறுவனம் செயற்பட்டு வருகிறது என்பதுதான் அமெரிக்காவின் பிரதான குற்றச்சாட்டாக இருந்து வருகிறது.

இந்த விவகாரத்தில் சர்வதேச அளவிலான விசாரணை நடத்தப்பட்டால் அது சீனாவுக்கும் உலக சுகாதார நிறுவனத்துக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## இந்தியாவில் கொரோனாவால் பாதிப்பு 14,500 ஆக உயர்வு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 14,500 ஆக அதிகரித்தது.

நேற்றுக்காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக ஆயிரத்து 76 பேருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் 32 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, ஒட்டுமொத்தமாக பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 14,500 ஆக அதிகரித்தது. உயிரிழப்பு 480 ஆக உயர்ந்தது. 1991 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

அதிகபட்சமாக மகாராஷ்டிரா மாநிலத்தில் 3,323 பேர் பாதிக்கப்பட்டதோடு 201 பேர் உயிரிழந்தனர்.

டில்லியில் ஆயிரத்து 640 பேரும் தமிழகத்தில் ஆயிரத்து 323 பேரும் மத்திய பிரதேசத்தில் ஆயிரத்து 308 பேரும் பாதிக்கப்பட்டனர்.

இதேபோன்று ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஜனாதிபதியின் தலைமை அதிகாரி கொரோனா தொற்றால் உயிரிழப்பு



(நைஜர்)

நைஜீரிய ஜனாதிபதி முஹம்மது புஹாரி பணிக்குழாத்தின் தலைமை அதிகாரி அபா கியாரி கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

அந்நாட்டின் மிக சக்தி வாய்ந்த மனிதர்களில் ஒருவராக இவர் திகழ்ந்தார்.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் 493 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 17 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையில் பணியை ஆரம்பித்தார் சுவீடன் இளவரசி





(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் வைத்தியசாலையில் அந்த நாட்டின் இளவரசி பணியை ஆரம்பித்தார்.

கொலைகார கொரோனா வைரஸ் உலகையே அச்சுறுத்தி வருகிறது. இந்தக் கொடிய வைரஸுக்கு பலியானவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நிமிடத்துக்கு நிமிடம் எகிறி வருகிறது.

கொரோனா வைரஸால் ஐரோப்பிய நாடுகள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. ஐரோப்பாவில் கொரோனா தாக்குதலுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்துள்ள நிலையில், உயிரிழப்புக்கள் ஒரு இலட்சத்தை நெருங்கி வருகிறது.

ஐரோப்பிய நாடான சுவீடனில் இதுவரை 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. 1,200 இற்கும் அதிகமானோரின் உயிரை இந்த வைரஸ் பறித்தது.

இந்நிலையில், அந்த நாட்டின் இளவரசி சோபியா, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் வைத்தியசாலையில் தனது பணியை நேற்றுக்காலை ஆரம்பித்தார்.

இணைய நேரலை மூலம் மூன்று நாட்கள் சிறப்பு பயிற்சியை முடித்த பின்பு தலைநகர் ஸ்டாக்ஹோமிலுள்ள சோபியா ஹெமெட் வைத்தியசாலையில் தனது பணியை ஆரம்பித்தார்.

வைத்தியசாலையில் சுகாதார உதவியாளராக சேர்ந்த இளவரசி சோபியா, கொரோனா நோயாளிகளை கையாள்வதில் நேரடியாக ஈடுபடமாட்டார். அதே சமயம் வைத்தியர்கள் மற்றும் தாதிகளுக்குத் தேவையான உதவிகளை செய்வார்.

சோபியா ஹெமெட் வைத்தியசாலையில் இணைய பாடத்திட்டமானது, சுகாதாரம் குறித்த சில முக்கிய பயிற்சிகளை வழங்குகிறது. சுத்தம் செய்தல், சமையலறையில் வேலை செய்தல், உபகரணங்கள் கிருமி நீக்கம் செய்தல் எனப் பலவற்றை கொண்டிருக்கிறது.

இந்தப் பயிற்சியை முடித்தவர்கள் சுகாதார ஊழியர்களின் பணிச்சுமையை குறைக்க உதவ முடியும். தற்போது வாரத்திற்கு 80 பேர் வீதத்தில் வைத்தியசாலையில் இந்தப் பயிற்சியை தன்னார்வலர்களுக்கு வழங்கி வருகிறது.



இளவரசி சோபியா, தனது முதல் நாள் பணியின் புகைப்படத்தை இணையத்தில் பகிர்ந்தார்.

நீல நிற மருத்துவ உடையுடன் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்து நிற்கும் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது.

மோடல் அழகியான சோபியா கடந்த 2015 ஆம் ஆண்டு சுவீடன் இளவரசர் கார்ல் பிலிப்பை திருமணம் செய்துகொண்டதன் மூலம் அரச குடும்பத்தின் அங்கமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# 14 பேரின் இரத்த மாதிரிகளில் கொரோனா தொற்று இல்லை

(வவுனியா)

வவுனியாவில்நேற்று முன்தினம் சேகரிக்கப்பட்ட 14 பேரின் இரத்த மாதிரிகளில் கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான இரத்த மாதிரிகள் சேகரிக்கும் செயற்பாடு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் சுகாதார வைத்திய அலுவலகத்தால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மத ஆராதனையில் கலந்துகொண்ட மற்றும் வேறு பகுதிகளில் தொடர்புகளை கொண்டிருந்த வவுனியாவைச் சேர்ந்தவர்களுக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருக்கின்றதா? என சோதனை செய்வதற்கான இரத்த மாதிரிகள் சேகரிக்கும் நடவடிக்கை கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த சோதனை நடவடிக்கையின் இரண்டாம் கட்டப் பணிகள் நேற்று முன்தினமும் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவின் காத்தான் கோட்டம் மற்றும் ஓமந்தை, புளியங்குளம் ஆகிய இடங்களில் தனிமைப்படுத்தி வைக்கப்பட்ட 14 பேரிடம் குறித்த இரத்த மாதிரிகள் சேர்க்கப்பட்டதுடன் அவை மேலதிக ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக அநுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பரிசோதனை முடிவில் ஒருவருக்கும் கொரோனா தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டது. (இ-299)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் கிளிநொச்சியில் சுத்திகரிப்பு நடவடிக்கை



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் கிளிநொச்சியில் நேற்று விசேட சுத்திகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மற்றும் இரணைமடுவில் அமைந்துள்ள பொலிஸ் உயர் நிலை அலுவலகங்களிலும் குறித்த தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது. பொதுமக்கள் அதிகளவில் பொலிஸ் உதவியை நாடுகின்ற நிலையில் குறித்த தொற்று நீக்கல் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# உத்தியோகத்தர்களின் அலுவலகங்களுக்கு ஊரடங்கு நேரத்தில் அழைக்கப்பட்ட மக்கள்





(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றையடுத்து ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படடுள்ள நிலையில் வவுனியாவிலுள்ள தோணிக்கல் , கோவில்குளம் உட்பட பெரும்பாலான கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிற்கு பொதுமக்கள் வருகைதந்தனர்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்கும் முகமாக வவுனியா உட்பட நாட்டின் பல பாகங்களில் ஊரடங்கு சட்டம்அமுல்படுத்தப் ஏபட்டுள்ள நிலையில் ஊரடங்கு காலப் பகுதியில் 5000 ரூபா கொடுப்பனவுகளுக்கான பதிவுகளை வீடு வீடாக சென்று பதிவுகளை மேற் கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு அரசாங்கம் அறிவித்தல் விடுத்திருந்தது.

எனினும் வவுனியாவில் நேற்று காலை முதல் அரசாங்கத்தினால் வழங்கப்படும் 5000 ரூபா கொடுப்பனவனவுகளுக்கான பதிவுகளை மேற்கொள்வதற்காக ஊடரங்கு சட்டத்தினை மீறி மக்களை கிராம சேவையாளர் அலுவலகத்திற்கு வரவழைத்து பதிவுகள் மேற் கொள்ளப்பட்டு வந்தன.

இதன் காரணமாக வவுனியாவிலுள்ள பெரும்பாலான கிராம சேவையாளர் அலுவலகங்களில் 200க்கும் மேற்பட்ட மக்கள் சமூக இடைவெளி பேணாது முகக்கவசம் இல்லாது வரிசையில் நின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.எம்.சமன் பந்துல சேனவிற்கு தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வினாவிய போது இவ்விடயம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். (இ-250)

# ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு




நோர்வே தமிழர் ஒற்றுமை குழு மத்தினரின் நிதியுதவியில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியினரால் ஊரடங்கினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கின் உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கேவில், ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.



மது போதைக்கு எதிரான அமைப்பினரால் தற்போது கொரோனா வைரஸ் காரணமாக உள்ள ஊரடங்குச்சட்டத்தினால் பாதிப்படைந்தது J/363 கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஆட்டோச் சங்க உறுப்பினர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ். பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 28கிராம சேவையாளர் பிரிவுகளில் மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின்சமாதனத்தின் ஏற்பாட்டில் 560 உணவு பொதிகள் சமாதனத்தின் தலைவர் கலாநிதி நா.தனேந்திரனினால் யாழ்பிரதேச செயலகத்திற்கு கையளிக்கப்பட்டன. இவ்வாறு கையளிக்கப்பட்ட பொருட்கள் கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட மக்களிடம் வழங்கப்பட்டன.



மேலும் யாழ்ப்பாணம் மாநகர சபையினது உறுப்பினர் கலாநிதி நா.தனேந்திரனின் ஏற்பாட்டில் தனது எல்லைப் பரப்புகுள்ளான 25 வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு காலை உணவு நிவராணமாக மூன்று நாட்களுக்கு தொடர்ந்து பாண் உணவினை விநியோகித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் வைத்திஸ்வராக்கல்லூரியினது பழைய மாணவர்களினது முயற்ச்சியினால் தற்போதைய காலநிலையினை கருத்தில் கொண்டு நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து ஏனைய நாடுகளில் குடியேறியவர்களினது நிதிபங்களிப்புடன் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களினது வாழ்வாதார கஷ்டங்களை நீக்குவதற்காக சுமார் இராண்டாயிரத்தி ஐந்நூறு ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் தமிழ் கல்விச் சேவை அமைப்பினூடாக நெல்லியடி வட்ட லயன்ஸ்கழகத்தினரால் வடமராட்சிக் கிழக்கு 419 கிராம சேவையாளர் பிரிவில் மாளிகைத்திடல் கிராமத்தில் நாளாந்த கூலி தொழிலுக்குச் செல்லும் 63 குடும்பத்தினருக்கு 17.04.2020 அன்று உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களான வே.தவச்செல்வம், வேல்விநாயகம், பரமேஸ்வரன், திருஸ்ரீபவன், திரு கோகுலன், உட்பட நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு வழங்கி வைத்தனர்.




யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிகப்பீட 15வது அணியில் தொழில் நிர்வாகமாணி (BBA) பட்டம்(2015) பெற்ற மாணவர்களினால் ஊரடங்கு காலத்தில் வறுமையினால் வாடும் J/148 சில்லாலை வடக்கு சாந்தை கிராமத்தில் வாழும் 95 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



மன்னாரில் ஊரடங்குச் சட்டம் அமுலப் படுத்தப்படுகின்ற காலப்பகுதிகளிலும், ஏனைய நாட்களிலும் மன்னார் நகர சபை பிரிவுக்குற்பட்ட பகுதிகளில் சுத்திகரிப்பு பணி மற்றும் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொருட்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் நகர சபை பிரிவுக்குப்பட்ட சுமார் 60 பணியாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் தேவையான உலர் உணவுப்பொருட்கள் நேற்று மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) ஏற்பாட்டில் அதன் குழுத் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் வழங்கப்பட்டன.

குறித்த நிகழ்விற்கு மன்னார் நகர சபையின் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நகர சபையின் செயலாளர், உப தலைவர், நகர சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு துப்பரவு பணியாளருக்கான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கி வைத்தனர்.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் குருநகர் தொடர்மாடி குடியிருப்பில் இதுவரை எவ்வித நிவாரண உதவியும்பெறாத 31குடும்பங்களுக்கு குருநகர் தொடர்மாடி மண்டபத்தில் 17.04.2020 அன்று உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



புத்தூர் வாரதவத்தை அக்காச்சி குடியிருப்பில் உள்ள தினக்கூலி செய்து வரும் 70 குடும்பங்கள் உள்ளிட்ட 75 குடும்பங்களுக்கு, ஊடகவியலாளர் இரா.மயூதரன் ஏற்பாட்டில் உலருணவுப் பொதிகள் 17.04.2020 அன்று வழங்கிவை க்கப்பட்டன.

கனடாவில் செயற்பட்டுவரும் “நம் உறவுக்கு நாமே கைகொடுப்போம்” என்ற அமைப்பின் ஊடாக கனேடிய உறவுகள் சேகரித்து அனுப்பிய மூன்று இலட்சம் ரூபா நிதியில் தலா மூவாயிரம் ரூபா பெறுமதி யான உலருணவுப் பொருட்கள் 75 குடும்பங்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

# புத்தாண்டு ராசி பலன்கள்

## 14.04.2020 - 13.04.2021



சார்வரி வருடத்தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் 10-ம் இடத்தில் குருவோடு இணைந்து குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். உங்கள் ராசியில் பஞ்சம ஸ்தானாதிபதி சூரியன், உச்சம் பெற்றிருக்கிறார். தன ஸ்தானத்தில் சுக்ரன் சொந்த வீட்டில் பலம்பெற்று சஞ்சரிக்கிறார். பிதுர்ரார்ஜித ஸ்தான மான 9-ம் இடத்தில் சனி, சந்திரன், கேது ஆகிய மூன்று கிரகங்களும் இணைந்திருக்கின்றன. இதனால் கூட்டுக்கிரக யோகமும், சனி - சந்திர யோகமும் உருவாகிறது. சகாய ஸ்தானத்தில் ராகுவும், விரய ஸ்தானத்தில் புதனும் வீற்றிருக்க, புத்தாண்டு தொடங்குகிறது. நான்கு கிரகங்கள் நல்ல நிலையில் சஞ்சரிக்கி ன்றன. 6-க்கு அதிபதி புதனும், 12-க்கு அதிபதியான குருவும் நீச்சம் பெற்றிருப்பது யோகம் தான். வருடத்தொடக்கமே வசந்தமாக அமையும்.

ராகு–கேது பெயர்ச்சி

1.9.2020 அன்று உங்கள் ராசிக்கு 2-ம் இடத்திற்கு ராகுவும், 8-ம் இடத்திற்கு கேதுவும் பெயர்ச்சியாகிறார்கள். எனவே சேமிப்பு உயரும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். மனக்குழப்பம் அகலும். கேதுவால் விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும். சுபவிரயங்களை ஏற்படுத்தி கொள்ளலாம். ஆரோக்கியத்தில் மட்டும் அடிக்கடி அச்சுறுத்தல் ஏற்படும். மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது.

குருப்பெயர்ச்சி

15.11.2020 அன்று மகர ராசிக்கு குருபகவான் பெயர்ச்சியாகிறார். 12-ம் இடத்திற்கு அதிபதியான குரு, அங்கு நீச்சம் பெறுவதால் யோகம் சேரும். விரயாதிபதி நீச்சம் பெறுவதால், சில நன்மைகளை செய்வார். குரு 9-ம் இடத்திற்கும் அதிபதி என்பதால், தந்தை வழியில் கொஞ்சம் அனுசரித்து செல்லுங்கள். சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்காது. அதேநேரம் குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சுப காரியங்கள் பல, இல்லத்தில் நடைபெறும். தாயின் உடல் நலம் சீராகும். பகையை வெல்வீர்கள். தொழில் புரிபவர்களுக்கு, பணியாளர் தொல்லை அகலும்.

சனிப்பெயர்ச்சி

26.12.2020 அன்று சனிப் பெயர்ச்சி நிகழ இருக்கிறது. அன்றைய தினம் உத்ராடம் 2-ம் பாதத் தில், உங்கள் ராசிக்கு பத்தாம் இடமான மகர ராசிக்கு வாக்கிய கணித பஞ்சாங்கம் ரீதியாக சனிபகவான் பெயர்ச்சியாகிறார். தொழிலில் தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். அளவோடு நடந்த தொழில் இனி ஆதாயம் தரும் விதத்தில் நடக்கலாம். அரசு வேலை கிடைப்பதற்கான சூழ்நிலை தென்படும். பெற்றோரின் உடல்நலத்தில் கவனம் தேவை.




குரு வக்ரமும், அதிசாரமும்

13.5.2020 முதல் 7.7.2020 வரை குரு பகவான் அதிசாரமாகி வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். 8.7.2020 முதல் 9.9. 2020 வரை தனுசு ராசியில் குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதே நேரத்தில் சனியும் வக்ரகதியிலேயே அவரோடு இணைந்து சஞ்சாரம் செய்கிறார். மீண்டும் குருபகவான் 6.4.2021-ல் கும்ப ராசிக்கு அதிசாரத்தில் செல்கிறார். இவற்றின் விளைவாக வரும் மாற்றங்கள், நன்மை வழங்கும். சில நேரம் மனதை குழப்பமடையவும் செய்யும் வழிபாடுகள் அவசியமான தருணம் இது.

வழிபாடு

சதுர்த்தி திதி அன்று விநாயகரை வழிபட்டு வருவதோடு, யோகபலம் பெற்ற நாளில் வைத்தீஸ்வரன் கோவில் சென்று தரிசனம் செய்து வாருங்கள்.

பெண்களுக்கு

ஆண்டின் தொடக்கம் அற்புத மாக அமையும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். இல்லத்தில் மங்கல ஓசை யும், மழலையின் ஓசையும் கேட்கும். குடும்ப முன்னேற்றம் கூடும். உறவுக ளின் ஆதரவு கிடைக்கும். பெண்க ளுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும். இடம் வாங்கும் யோகம் உண்டு. குரு, சனி வக்ர காலங்களில் கவனம் தேவை.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2014

### ராம்

இந்த ஊரடங்குல மொபைல நோண்டினதுக்கு பதிலா



வீட்டு கொல்லைப்பக்கம் நிலத்தை நோண்டி இருந்தாலும் ஒரு கிணறாவது உருவாகியிருக்கும்

### கமலா



அட பாவிங்களா வாழ்க்கையில லீவு வேணாம்னு சொல்லுற அளவுக்கு வெறுக்க வச்சிட்டீங்களேடா


### நிஷா

தற்போது பேக்கறிகளில் கிடைக்கும் உணவுகள் முன்பு போல் சுவை இல்லை என மக்கள் விசனம்



அது எப்பிடி ரேஸ்ட்டா வரும் இப்ப தான் கொரோனாக்கு பயந்து எல்லாருமே கைய கழுவிட்டு தானே வேலை செய்யிறம்

### ரிஷி




### சத்யா

அவன் செத்தா லீவு கிடைக்கும் இவன் செத்தா லீவு கிடைக்கும்னு நினைச்சோம்



கடைசில நாம சாகாம இருக்க லீவு எடுக்க வேண்டி இருக்கு

### செல்வி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.